சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.136/2017

03.07.2025

வா.சா. 2 திரு. கிருஷ்ணமூர்த்தி, த/பெ. கோபால்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வழக்கு கோப்புகளை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துபார்த்துள்ளேன். புல எண் 11, 12 எண்களுக்கு வழக்கு போட்டுள்ளார்கள். புல எண்11 க்கு 10 செண்ட் விஸ்தீரணமும் 12 க்கு 4 செண்ட் விஸ்தீரணமும் கொண்டது. புல எண் 11 கோபாலுக்கு சொந்தமானது. புல எண் 12 மங்களம் என்பவருக்கு சொந்தமானதாகும். வழக்கை மங்களம் தாக்கல் செய்துள்ளார். கோபால் வழக்கு தாக்கல் செய்யவில்லை. புல எண் 11 க்கு நான்கெல்லை தெற்கே குடியானதெரு, வடக்கே அக்ரஹாரம், மேற்கே ராமு மனை, கிழக்கில் மங்களம் மனையும் வீடும் உள்ளது. புல எண் 12 க்கு நான்கெல்லை மேற்கே கோபால் மனையும், வீடும், தெற்கே குடியானதெரு, வடக்கே அக்ராஹாரம், கிழக்கே சாமிநாதனுக்கு பாத்தியப்பட்ட 5 குழி நிலமும் உள்ளது. வாதி மங்களம் எனது தாயார் என்றால் சரிதான். வழக்கை எனது தாயாருக்காக நான் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். பிராது தயாரிக்க நான் தான் வழக்கறிஞருக்கு தகவல் சொன்னேன். முதலில் நன்னிலம் வழக்கறிஞர் வைத்திருந்தேன். எனது தாயாரிடமிருந்து நான் பவர் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. எனது தாயார் வழக்கு தாக்கல் யெச்துள்ள நிலையில் நான் சாட்சியமளிப்பது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதி நானே திட்டமிட்டு வழக்கிற்காக தயார் செய்தது என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் நிராகரிக்கக்கூடியது என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.